**பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்**

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை கூடுதல் இயக்குநர்(மு.கூ.பொ), அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள், சென்னை-15**

**முன்னிலை : திருமதி.ஜோ.ம.யமுனாராணி.எம்.எஸ்.சி.,எம்.பில்.,பி.எச்.டி.,**

செ.மு.ந.க.எண்.233/நிரு4(3)/2020 நாள்.29.10.2021

பொருள்: பணியமைப்பு – சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இயக்குநரகம், சென்னை-15 – திரு.வா.கோவேந்தன், இளநிலை உதவியாளர், மாவட்ட சமூக நல அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் - கருணை அடிப்படை பணிநியமனம் – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்ய கோரியது – தொடர்பாக.

பார்வை:
1. மாவட்ட சமூக நல அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் ந.க.எண்.2193/அ1/2019, நாள்.02.01.2020
2. இவ்வலுவலக கடித எண்.233/நிரு4(3)/2019, நாள்.28.07.2020 & 16.03.2021.
3. அரசாணை (நிலை) எண்.240, சந(ம)சதிது, நாள்.10.10.1996.
4. அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ1) துறை, நாள்.26.02.2021
5. அரசு கடித எண்.6900/சந1(2)/2020-5, நாள்.04.10.2021

........

ஆணை:

பார்வை 4-ல் காணும் அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரையுள்ள காலங்களில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத நிகழ்வுகளில் அத்தகைய பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக பின்வருமாறு வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியார்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, 20.09.2018 முற்பகல் முதல் காஞ்சிபுரம் மாவட்டம், மாவட்ட சமூக நல அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.வா.கோவேந்தன் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்த விதிதளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவை இல்லாததால், தனியரின் பணியினை பணியில் சேர்ந்த நாளான 20.09.2018 மு.ப முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

திரு.வா.கோவேந்தன், இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர்ந்து 3 ஆண்டு கால பணியில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக இருப்பார் எனவும் ஆணையிடப்படுகிறது.

மேற்படி, தனியர் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-ஜோ.ம.யமுனாராணி
கூடுதல் இயக்குநர்(மு.கூ.பொ)
சந (ம) மஉ துறை

இணைப்பு : பணிப்பதிவேடு அசல்

பெறுநர் :-
திரு.வா.கோவேந்தன்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட சமூக நல அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்,(உரிய அலுவலர் மூலமாக)

**நகல்**

1. மாவட்ட சமூக நல அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம்.
2. இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி//

[signature] 29/10/21

நிருவாக அலுவலர்
சந (ம) மஉ துறை

மே. கு. ந.க. எண். 2193. நாள். 22.11.2021
தனியருக்கு சார்பு செய்யப்படுகிறது.

பெறுநர்.
திரு. வா. கோவேந்தன்

2/3